செ.வெ.எண்: நாள்: 06.10.2021

**விருதுநகர் மாவட்டம்**
**உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு, வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள கோவிட் தடுப்பு பொருட்களை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு**

---

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள புதிய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் இன்று(06.10.2021) உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு, வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள கோவிட் தடுப்பு பொருட்களை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு, வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள கோவிட் தடுப்பு பொருட்களான காய்ச்சல் கண்காணிப்பு கருவி, கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு உடைகள், முகக்கவசங்கள், கோவிட் பாதுகாப்பு உபகரணங்களை ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது தேர்தல் நடத்தும் அலுவலர்/திட்ட இயக்குநர், திருமதி.பெ.திலகவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(தேர்தல்) திரு.அ.சந்திரசேகரன், விருதுநகர் துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) நேர்முக உதவியாளர் திரு.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**